| 7. | பழைய பேருந்து நிலையம் சுங்கம் வசூலித்தல் |
| 8. | பூலவாரி சுகுமார் நகர் மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| | **மண்டலம்–4** |
| 9. | வாரசந்தைப்பேட்டையில் உள்ள பழைய / புதிய கழிப்பிடம் மற்றும் குளியல் அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 10. | பட்டுக்கோட்டையார் நகர் அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 11. | பட்டுக்கோட்டையார் நகர் மாநகராட்சி குடியிருப்பு அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 12. | பட்டுக்கோட்டையார் நகர் மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 13. | பல்லடம் ரோடு வாரச்சந்தைப்பேட்டையில் உள்ள மீன்மார்க்கெட் கட்டணம் வசூலித்தல் |
| 14. | பல்லடம் ரோடு வாரச்சந்தை மற்றும் வார கால்நடை சந்தை ஒட்டுமொத்த காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலித்தல் |
| 15. | ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூலித்தல் (பல்லடம் ரோடு வாரச்சந்தைப் பேட்டை) |
| 16. | நடராஜா தியேட்டர் மெயின்ரோடு அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் |
| 17. | ஈஸ்வரமூர்த்தி பூங்கா அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலித்தல் |
| 18. | சூசையாபுரம் மேற்கு பார்த்த கட்டண கழிப்பிம் கட்டணம் வசூலித்தல் |

மண்டலம்–1ல் 3 குத்தகை இனங்களும், மண்டலம்–2ல் 2 குத்தகை இனங்களும், மண்டலம்–3ல் 3 குத்தகை இனங்களும், மற்றும் மண்டலம்–4ல் 10 குத்தகை இனங்களும், ஆக மொத்தம் 18 குத்தகை இனங்களுக்கும் ஏல அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அனுமதிக்கலாம். மேலும் ஏல அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்ய உத்தேச செலவினம் ரூ.2,00,000/–த்திற்கு அனுமதி வழங்கலாம்.

**( அ.1 / 6235 / 2018)**

– – – – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**421)** திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டலங்களில் உள்ள ஏலம் போகாத குத்தகை இனங்களை 2019–2022–க்கு கீழ்க்காணும் குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. குத்தகை இனங்களுக்கான அறிவிப்பு தினசரி செய்தி நாளிதழில் வெளியிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**421–ன் தொடர்ச்சி**

| வ. எண் | உரிமையாணை இனம் | கடைகளின் எண்ணிக்கை விபரம் |
|---|---|---|
| | **மண்டலம் –1** | |
| 1 | அனுப்பர்பாளையம் வணிக வளாக கடைகளின் எண். 7,27,28,30 | 4 |
| 2 | பெரியார்காலனி வணிக வளாக கடைகளின் எண் 4,6,7 | 3 |
| 3 | எ.வி.பி.ரோடு பாரதியார் வணிக வளாக கடைகளின் எண். 21,22,23,24,25 | 5 |
| 4 | செட்டிபாளையம் பூங்காஅருகில் உள்ள கடைகளின் எண்.1,3 | 2 |
| 5 | வேலம்பாளையம் மண்டல அலுவலகத்திற்கு வடபுறம் உள்ள திலகர் நகர் கடை எண்.1 – ( ஏ.சி. சீட்)200 ச.அடி | 1 |
| 6 | வேலம்பாளையம் மண்டல அலுவலகத்திற்கு வடபுறம் உள்ள திலகர் நகர் கடை எண்.2 – ( ஏ.சி. சீட்)200 ச.அடி | 1 |
| | **மொத்தம்** | **16** |
| | **மண்டலம்–2** | |
| 7 | அவிநாசி நீர்தேக்க நிலையம் இரண்டாவது மாடி மண்டபம் எண்.–1 –( 46 ¼ x 20) | 1 |
| 8 | அவிநாசி நீர்தேக்க நிலையம் புதிய கடை அருகில் உள்ள தரைதள (காலியிடம்) கடை | 1 |
| 9 | புதிய பேருந்து நிலையம் தரை தள கடைகளின் எண்.2,19,21,23, 24,25, 26,33 | 8 |
| 10 | புதிய பேருந்து நிலையம் மேற்குபுறம் உள்ள உணவு விடுதி | 1 |
| 11 | நெருப்பெரிச்சல் பாண்டியன் நகர் கடை எண்.4 | 1 |
| 12 | நெருப்பெரிச்சல் பாண்டியன் நகர் கடை எண்.7 | 1 |
| 13 | பாரதியார் வணிக வளாகம் முதல் மாடி மண்டபம் எண்–4 440ச.அடி.(அரசு துறை) | 1 |
| 14 | பாரதியார் வணிக மையம் முதல் மாடி மண்டபம் எண். 4A- 220ச.அடி. (அரசு துறை) | 1 |
| 15 | புதிய பேருந்து நிலையம் முதல்தள கடைகளின் எண்.2, 4, 5, 6, 8, 9, 10, 11, 12,13, 14, 15, 16, 17, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33,34,35,36,38, 39 | 34 |
| | **மொத்தம்** | **49** |
| | **மண்டலம்–3** | |
| 16 | காமராஜ் சாலை 'ஈ' பிளாக் கடை எண்.5 | 1 |
| 17 | பழைய பேருந்து நிலைய தரை தள கடைகளின் எண். 1,5,10,16,17 | 5 |
| 18 | பழைய பேருந்து நிலைய முதல் தள கடைகளின் எண். 1,2,3,6,8, 9,10,11, 12,13,14, 15,17, 18,19,20, 21,22,23, 24, 26,27,28,30 | 24 |
| 19 | பேருந்து நிலைய MUDF தரை தள கடைகள் 4,6,14,18 | 4 |
| 20 | பழைய பேருந்து நிலையம் MUDF II திட்ட முதல் தள கடைகளின் எண். 1,2,3,4,5,6,7,8,9, | 9 |
| 21 | பழைய பேருந்து நிலையம் MUDF II திட்ட முதல் தள உணவு விடுதி | 1 |
| 22 | பேருந்து நிலைய எடை பார்க்கும் இயந்திரம் காலியிடம் கடை எண்.1 | 1 |
| 23 | பேருந்து நிலைய எடை பார்க்கும் இயந்திரம் காலியிடம் கடை எண்.2 | 1 |
| 24 | பேருந்து நிலைய முதல் மாடி MUDF II திட்ட அலுவலகம் மண்டபம் 3400 ச.அடி | 1 |
| | **மொத்தம்** | **47** |

| வ. எண் | உரிமையாணை இனம் | கடைகளின் எண்ணிக்கை விபரம் |
|---|---|---|
| | <u>மண்டலம்–4</u> | |
| 25 | வாரசந்தை பேட்டை முதல் தள கடைகளின் எண்.2,4,5,6,10, 12, 13,14,15, 16,17,18 | 12 |
| 26 | வார சந்தை பேட்டை புதிய முதல் தள கடைகளின் எண்.1,2,3,4 | 4 |
| 27 | மாட்டு கொட்டகை தரை தள கடைகள் 10,14,16 | 3 |
| 28 | ஜெய்வாபாய் பள்ளி ரோடு தரை தள கடைகளின் எண். 9,10,12,17, 28,32,35 | 7 |
| 39 | குமரன் வணிக வளாக தரை தள கடைகளின் எண். 8, 15, 17, 18, 21,22, 23, 30,31 | 9 |
| | மொத்தம் | 35 |

மண்டலம்–1ல் 16 கடைகளும், மண்டலம்–2ல் 49 கடைகளும், மண்டலம்–3ல் 47 கடைகளும் மற்றும் மண்டலம்–4ல் 35 கடைகளும் ஆக மொத்தம் 147 கடைகளுக்கும் ஏல அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைவகப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

அனுமதிக்கலாம். மேலும் ஏல அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்ய உத்தேச செலவினம் ரூ.2,00,000/–த்திற்கு அனுமதி வழங்கலாம்.

( அ.1 / 6236 / 2018)

– – – – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**422)** திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான மூன்று ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் ஒன்பதாண்டுக் குத்தகை இனங்களை 2019–2022ஆம் ஆண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவது குறித்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை புத்தக வடிவில் 200 எண்ணிக்கை ஈரோடு மாவட்ட பெண்கள் கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம். ( அ.1 / 6235 / 2018)

– – – – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.

– – – – –

**423)** திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான பாரதியார் வணிக வளாகம் முதல் மாடியில் மண்டபம் எண்.1–ல் 247.80 சதுர மீட்டர். பரப்பளவுள்ள அறை அமிர்தா எஜுகேசனல் & சாரிடபிள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஏழை எளிய மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்த வாடகைக்கு விட கோரப்பட்டு இருந்தது. மேலும் தற்போது கட்டிடம் காலியாக உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை ந.க.எண். 226/2016/ம.தி2 நாள் 17.10.2018ன் படி ஏழை எளிய மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்த அமிர்தா எஜுகேசனல் & சாரிடபிள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு மேற்படி மண்டபத்தை வாடகைக்கு பொதுப்பணித் துறையின் அலுவலக வாடகை மதிப்பீடான மாத வாடகை ரூ.51,508/–க்கு வாடகைக்கு சம்மதம் தெரிவித்து கட்டிடம் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளார்.

**423–ன் தொடர்ச்சி**

அதன்படி பாரதியார் வணிக வளாக முதல் மாடி அறை எண்.1ஐ அமிர்தா எஜுகேசனல் & சாரிடபிள் டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுக்கு மாத வாடகை ரூ. 51,508/–ஐ வாடகையை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்வதற்கு மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ஒப்புதல் வழங்கலாம். ( அ.1 / 5605 / 2018 )

– – – – –

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

– – – – –

**424)** இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட வேலம்பாளையம் 3ம் நிலை நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்டு வந்த போது இரண்டாவது குடிநீர் திட்டம் மற்றும் கடைகள் கட்டும் பணிக்காக ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கடன் எண்கள் 3076 முதல் 3083 முடிய மற்றும் 3102 மற்றும் 3103 ஆகிய இரண்டாவது குடிநீர் திட்ட பணிகளுக்கு 22 கட்ட தவணைகளாக மொத்தம் ரூ.52.31 இலட்சங்களும், கடைகள் கட்டும் பணிகளுக்கு 20 கட்ட தவணைகளாக மொத்தம் ரூ.53.00 இலட்சங்களும் கடனாக பெறப்பட்டது.

மேற்படி கடன் தொகையில், நிலுவை கேட்பு ரூ. 1,25,88,997/–ம் நடப்பு கேட்பு ரூ.15,73,626/– ஆக மொத்தம் ரூ.1,41,62,623/– செலுத்தக் கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி கழகத்தின் 04.04.2018ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் தெரிவித்ததின்படி 31.03.2018 முடிய உள்ள காலத்திற்கு மேற்படி கடனுக்கான அசல் வட்டி மற்றும் அபராத கட்டணங்கள் சேர்த்து ரூ.1,41,62,623/– செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி நகராட்சி நிலையில் இருந்து 01.01.2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டும், அதனை தொடர்ந்து 2011ம் ஆண்டு முதல் திருப்பூர் மாநகராட்சியுடன் 2 நகராட்சிகள் மற்றும் 8 ஊராட்சிகள், ஒருங்கிணைக்கப்பட்டு 60 வார்டுகளை கொண்டு விரிவாக்கம் செய்யப்பட்ட திருப்பூர் மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சியின் சொத்துவரி குடிநீர் கட்டணம் உள்ளிட்ட நிதி ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு மட்டுமே மாநகரின் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள், திடக்கழிவு பணிகள், பொது சுகாதார பணிகள் பணியாளர்களின் ஊதியம், நிர்வாக செலவினங்கள் மற்றும் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் ஓய்வு பெறும் பணியாளர்களின் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை உள்ளிட்ட அனைத்து செலவினங்களும் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கடனாக பெறப்பட்ட ரூ.105.31 இலட்சத்தில் அசல் செலுத்தப்பட்டது போக மீதமுள்ள நிலுவைத் தொகை ரூ.26,71,845/– இன்றைய நாளில் அதற்கான வட்டி மற்றும் அபராத கட்டணங்கள் சேர்த்து ரூ.1,41,62,623/–ஐ செலுத்தக் கோருவது இயலாத ஒன்றாக உள்ளது.

இம்மாநகராட்சியின் தற்போதைய வருவாயானது மாநகரின் அத்தியாவசியப் பணிகள் குடிநீர் பராமரிப்பு, பணியாளர்களின் ஊதியம், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் செலவினங்கள் போன்ற அன்றாட செலவினங்களை மேற்கொள்வதற்கே போதுமானதாக இல்லை. எனவே இம்மாநகராட்சியின் தற்போதைய நிதிநிலையினை கருத்தில் கொண்டு செலுத்தப்பட வேண்டிய வட்டி மற்றும் அபராதக் கட்டணங்களை முழுமையாக தள்ளுபடி செய்து நிலுவை கடன் தொகையான ரூ.26.72 இலட்சத்தினை ஒரே தவணையில் மாநகராட்சி செலுத்துவதற்கு ஏதுவாக

**424–ன் தொடர்ச்சி**

அரசின் அனுமதி பெற உரிய கருத்துரு அனுப்பிட மாமன்றத்திற்கு பொருள் குறிப்பு வைக்கப்பட்டதில் பார்வை (3) ல் கண்டுள்ள திருப்பூர் மாமன்றத் தீர்மானத்தில் மாமன்றம் உரிய ஒப்புதல் அளித்துள்ளது. இத்துடன் மாமன்ற தீர்மான நகல் ஒன்று இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் இதன் அடிப்படையில் நிலுவை கடன் தொகையான ரூ.26.72 இலட்சத்தினை ஒரே தவணையில் மாநகராட்சி செலுத்துவதற்கு ஏதுவாக அரசின் அனுமதி பெற உரிய கருத்துரு அனுப்பிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

வேலம்பாளையம் பேரூராட்சியாக இருந்தபோது IDSMT திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியினை தள்ளுபடி செய்திடவும், இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மொத்த கடனில் செலுத்தப்பட்டது போக மீதமுள்ள கடன் தொகை ரூ.26,71,845/–ஐ மட்டும் ஒரே தவணையில் செலுத்த அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர் வரியாக அரசுக்கு உரிய கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

( இ.2 / 3173 / 2015)

– –– – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று ஒப்புதல் வழங்கப்பட்டது.**

– – – – –

**425)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சியில் 81 கட்டிடங்களில் மொத்தம் 1407 ச.மீ பரப்பளவிற்கு 303 KW திறன் கொண்ட சூரிய ஒளி மின் சக்தி தகடுகள் அமைக்கும் பணி மேற்கொள்ள திருப்பூர் ஸ்மார்ட் சிட்டி போர்டு கூட்ட நாள். 10.05.2018 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்ட மேற்படி பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை, ந.க.எண்.25477/2017/DO1, நாள்.12.10.2018 வாயிலாக ரூ.2.34 கோடி மதிப்பிட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 14.12.2018 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி திருப்பூர் மாநகராட்சியில் 81 கட்டிங்களில் மொத்தம் 1407 ச.மீ பரப்பளவிற்கு 303 KW திறன் கொண்ட சூரிய ஒளி மின் சக்தி தகடுகள் அமைக்கும் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.2,34,00,000/-) 14.12.2018 அன்று M/s. Premier Solar System (P) Ltd, Secundarabad-09, Telangana. மற்றும் M/s. Green Field Solar Solutions (P) Ltd, Chennai. ஆகிய இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தன.

மேற்கண்ட நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு ஒப்பந்ததாரர்களில் இருவரும் இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் M/s. Premier Solar System (P) Ltd, Secundarabad-09, Telangana மற்றும் M/s. Green Field Solar Solutions (P) Ltd, Chennai ஆகிய இரண்டு நிறுவனங்களின் விலைவிகித ஒப்பந்தப்புள்ளி உறை 24.12.2018 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

425–ன் தொடர்ச்சி

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (12% GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s.Premier Solar System (P) Ltd, Secundarabad-09, Telangana. | Rs.2,33,80,056/- | மதிப்பீட்டு விலையை விட 17.34% கூடுதலாகும் | இணைக்கப்பட்டுள்ளது |
| 2. | M/s. Green Field Solar Solutions (P) Ltd, Chennai. | Rs.2,14,19,160/- | மதிப்பீட்டு விலையை விட 7.50% கூடுதலாகும் | இணைக்கப்பட்டுள்ளது |

மேற்படி தொழில்நுட்ப தகுதி பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த M/s. Green Field Solar Solutions (P) Ltd,Chennai நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். TSCL/E2/5574/2018, நாள்: 26.21.2018 -ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தங்களது 31.12.2018-ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.1-ல் ரூ.64,500-க்கு பதிலாக எண்.1-ல் ரூ.62,950-க்கும் , இனம் எண்.2-ல் ரூ.59,125-க்கு பதிலாக எண்.2-ல் ரூ.57,700-க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (12% GST உட்பட) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s. Green Field Solar Solutions (P) Ltd,Chennai. | ரூ.2,09,04,072/- | மதிப்பீட்டு விலையை விட 4.91 % அதிகம் |

மேற்படி நிறுவனத்தார் தங்களது கடிதத்தில் மேலும் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்திருந்த காரணத்தினால் விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.91 % அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலைனக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.91 % அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். TSCL / E2 / 5574 / 2018)**

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**426)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் அணைப்பாளையம் பாலம் முதல் மணியகாரம்பாளையம் பாலம் வரை நொய்யல் ஆற்றினை மேம்படுத்தும் பணி முதற்கட்டமாக மேற்கொள்ள மிடுக்கான நகர திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டது. அதற்கான நிர்வாக அனுமதி HPPSC ஆறாவது கூட்டம் நாள் 12.10.2018ம் தேதியன்று ரூ.156.76 கோடிக்கு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை நிர்வாக வசதி கருதி கீழ்கண்டவாறு 6 சிப்பங்களாக ( Packages) பிரித்து பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**426–ன் தொடர்ச்சி**

| | | |
|---|---|---|
| 1) | திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் வெளியேறும் கழிவுநீரை சேகரம் செய்ய நொய்யல் ஆற்றின் வடக்குப்புற கரையோரம் வடிகால் கட்டுதல் | 30.50 கோடி |
| 2) | திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் வெளியேறும் கழிவுநீரை சேகரம் செய்ய நொய்யல் ஆற்றின் தெற்குப்புற கரையோரம் வடிகால் கட்டுதல் | 29.00 கோடி |
| 3) | நொய்யல் ஆற்றின் கரையின் இருபுறமும் தார்ச்சாலை அமைத்தல், பேவர் பிளாக் கற்கள் பதித்தல், கம்பிவேலி அமைத்தல் | 29.00 கோடி |
| 4) | நொய்யல் ஆற்றங்கரையின் வடக்குப் பக்கம் தடுப்புச் சுவர் கட்டுதல், ஜம்மனை ஓடையின் குறுக்கே சிறுபாலங்கள் கட்டுதல் மற்றும் அணைக்காடு பகுதியில் பூங்காவுடன் உணவகம் கட்டுதல் | 30.00 கோடி |
| 5) | நொய்யல் ஆற்றங்கரையில் தெற்குப் பக்கம் தடுப்புச்சுவர் கட்டுதல், மணியகாரம்பாளையம் பாலம் அருகில் பூங்காவுடன் கூடிய திறந்தவெளி அரங்கம் அமைத்தல் | 28.76 கோடி |
| 6) | நொய்யல் ஆற்றின் தெற்கே 3 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும், வடக்கே 2 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் கட்டுதல் | 9.50 கோடி |
| | **மொத்தம்** | **156.76 கோடி** |

**அலுவலகக் குறிப்பு :** மேற்கண்ட பணிகள் 6 சிப்பங்களாக பிரித்து பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம். (இ.1 / 6630 (II) /2017)

– – – – –

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

– – – – –

**427)** திருப்பூர் மாநகரில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை 100% முழுமையாக செயல்படுத்திட 3869 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இம்மாநகராட்சியில் துப்புரவு பணிக்கு ஏற்கனவே 1661 பணியாளர்கள் பணியாற்றிட அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 885 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் இருந்து வருகின்றனர்.

மேற்படி பற்றாக்குறைக்காக இம்மாநகராட்சியின் மண்டலம் 2 மற்றும் 3ன் துப்புரவு பிரிவு திடக்கழிவுகளை சுத்திகரிப்பு செய்ய உரக்கிடங்கு ஏதும் இல்லாத காரணத்தினால் மாநகராட்சி மற்றும் சுற்று பகுதியில் அமைந்துள்ள பயன்பாடற்ற பாறைக்குழியில் கொட்டப்பட்டு திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நவீன முறையில் 100 சதவீதம் அறிவியல் ரீதியாக அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவுபடி திட்டமிடப்பட்டு நுண்உரமாக்கல் மையங்கள் தேர்வு செய்யப்பபட்டு பணிகள் நடைபெற்று பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

இந்நிலையில் ஆரம்பநிலையில் வீடுவீடாக குப்பைகளை சேகரிக்க (Primary Collection) மாநகராட்சி நிரந்தர துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த இயலாத காரணத்தினால் துப்புரவு பணியாளர்களின் அளவுகோலின்படி கூடுதலாக 1580 பணியாளர்கள் இம்மாநகராட்சிக்கு தேவைப்படுவதை அமர்த்திக் கொள்ள 09.10.2018ம் தேதியிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதில் 13.11.2018ம் நாளிட்ட ந.க.எண்.28369/ஜே3/2018ன் படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் 1580 துப்புரவு பணியாளர்களை வெளிச்சந்தை அடிப்படையில் ஒப்பந்த முறையில் கீழ்கண்ட விபரப்படி அமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கி அதற்கான உத்திரவு வரப்பெற்றுள்ளது.

**427–ன் தொடர்ச்சி**

இம்மாநகராட்சி பணியாளர்களின் ஆண்டு ஊதிய செலவீனம் 49% மிகாமல் 1580 துப்புரவு பணியாளர்களை வெளிச்சந்தை அடிப்படையில் ஒப்பந்த முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் Tamilnadu Transparency in Tender Act & Rules 2000 முறையில் ஒப்பந்தப்புள்ளி பெற்று மாமன்றத்தின் அனுமதி பெற்று அமர்த்திக் கொள்ளவும், அமர்த்தப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை அவர்களின் முழுவிபரம், வழங்கப்படும் ஊதியம் மற்றும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து சலுகை கட்டணங்களையும் கணக்கிட்டு வழங்க ஒப்பந்ததாரரை முழு பொறுப்பாக்கியும் மற்றும் ஒப்பந்ததாரருக்குரிய சேவைக் கட்டணம் 5% மிகாமல் கணக்கீடு செய்யவும் மற்றும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள Weight based contracting SWM பணிகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும் மேலும் காலி ஏற்படும் பணியிடங்களில் வெளிச்சந்தை முறையில் ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பணியமர்த்தப்பட வேண்டும் எனவும் எக்காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களைத் தவிர கூடுதலாக பணியமர்த்தக் கூடாது என தெரிவிக்கப்பட்ட உத்திரவுப்படி இம்மாநகராட்சியில் நுண்உரமாக்கல் மையத்திற்கு தேவைப்படும் 1580 துப்புரவு பணியாளர்களை அமர்த்திக் கொள்ள வரப்பெற்ற செயல்முறை உத்திரவினை மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(எச்.1 / 5311 / 2018)

– – – – –

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

– – – – –

**428)** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19–ன் கீழ் வார்டு எண்.07, அவிநாசிக்கவுண்டன்பாளையம் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.8,50,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 12.10.2018 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 04.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு S. செல்வராஜ் | 7,45,536/– | மதிப்பீட்டு விலையைவிட 5.22% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திருவாளர்கள்.ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | 7,68,427/– | மதிப்பீட்டு விலையைவிட 8.45% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு S. செல்வராஜ் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 106 / N / 2018–19, நாள் 07.12.2018–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 12.12.2018ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.3–ல் ரூ.3650/–க்கு பதிலாக ரூ.3610/–க்கு விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பபட்டபின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

**428–ன் தொடர்ச்சி**

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு S. செல்வராஜ் (விலைக்குறைப்புக்கு பின்) | 7,43,816/– | மதிப்பீட்டு விலையைவிட 4.97% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.97% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணி திட்டப் பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட 4.97% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
3. மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

( ம.எண். 106 / N / 2018 - 19 )

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

- - - - -

**429)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் 15 வேலம்பாளையம் மண்டலம் 1–ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN 42 F 2306–ல் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்ய அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TVS பல்லடம் என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி ரூ.97,246/–க்கு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் செலவீனத்திற்கும் மாநகராட்சி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்கள் 10.12.2018ந் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய தேவையான பணிகளை மேற்கொள்ளவும், இதற்காகும் செலவீனம் ரூ.97,246/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட வாகனத்தின் பழுது நீக்கும் பணியினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ.1 / 5055 / 2018 / ம.1)

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

- - - - -

**430)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் 15 வேலம்பாளையம் மண்டலம் 1–ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN 39 BE 8237–ல் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்ய அங்கீகாரம் பெற்ற நிறுவனமான T V Sundaram Iyengar & Sons Private limited, பல்லடம் என்ற நிறுவனத்தில் மொத்த செலவினம் ரூ.1,88,624/–க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் செலவீனத்திற்கும் மாநகராட்சி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களது 10.12.2018ந் தேதிய அலுவலக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய தேவையான பணிகளை மேற்கொள்ளவும், இதற்காகும் செலவீனம் ரூ.1,88,624/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 5254 / 2018 / ம.1)

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**431)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் 15 வேலம்பாளையம் மண்டலம் 1–ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN 42 R 6949-க்கு தகுதி சான்று முடிவடைந்த நிலையில் தகுதிச் சான்று புதுப்பிக்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TVS, பல்லடம் என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி ரூ.1,85,479/–க்கு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் செலவீனத்திற்கும் மாநகராட்சி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்கள் 10.12.2018ந் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று புதுப்பிக்க தேவையான பணிகளை மேற்கொள்ளவும், இதற்காகும் செலவீனம் ரூ.1,85,479/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட வாகனத்தின் பழுது நீக்கும் பணியினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ.1 / 5337 / 2018 / ம.1)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**432)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் 15 வேலம்பாளையம் மண்டலம் 1–ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN 39 AR 0496–ல் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்ய அங்கீகாரம் பெற்ற நிறுவனமான T V Sundaram Iyengar & Sons Private limited, பல்லடம் என்ற நிறுவனத்தில் மொத்த செலவினம் ரூ.1,92,000/–க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் செலவீனத்திற்கும் மாநகராட்சி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களது 10.12.2018ந் தேதிய அலுவலக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**432–ன் தொடர்ச்சி**

எனவே மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்ய தேவையான பணிகளை மேற்கொள்ளவும், இதற்காகும் செலவீனம் ரூ.1,92,000/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட வாகனத்தின் பழுது நீக்கும் பணியினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ.1 / 5695 / 2018 / ம.1)

– – – – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**433)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் 15 வேலம்பாளையம் மண்டலம் 1–ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN 39 CA 3430க்கு தகுதி சான்று முடிவடைந்த நிலையில் தகுதிச் சான்று புதுப்பிக்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ABT Insustries Limited, பல்லடம் என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி ரூ.29,441/–க்கு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் செலவீனத்திற்கும் மாநகராட்சி ஆணையாளர்/ தனி அலுவலர் அவர்கள் 10.12.2018ந் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று புதுப்பிக்க தேவையான பணிகளை மேற்கொள்ளவும், இதற்காகும் செலவீனம் ரூ.29,441/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட வாகனத்தின் பழுது நீக்கும் பணியினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ.1 / 5696 / 2018 / ம.1)

– – – – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**434)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் 15 வேலம்பாளையம் மண்டலம் 1–ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN 39 AR 0156க்கு தகுதி சான்று முடிவடைந்த நிலையில் தகுதிச் சான்று புதுப்பிக்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ABT Insustries Limited, பல்லடம் என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி ரூ.1,99,748/–க்கு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் செலவீனத்திற்கும் மாநகராட்சி ஆணையாளர்/ தனி அலுவலர் அவர்கள் 10.12.2018ந் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று புதுப்பிக்க தேவையான பணிகளை மேற்கொள்ளவும், இதற்காகும் செலவீனம் ரூ.1,99,748/–க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**434–ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட வாகனத்தின் பழுது நீக்கும் பணியினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**( இ.1 / 5697 / 2018 / ம.1)**

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**435)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம் **15** வேலம்பாளையம் மண்டலம் **1**–ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN 39 BU 7045க்கு தகுதி சான்று முடிவடைந்த நிலையில் தகுதிச் சான்று புதுப்பிக்க அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ABT Insustries Limited, பல்லடம் என்ற நிறுவனத்தில் விலைப்புள்ளி ரூ.**52,510/–**க்கு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் செலவீனத்திற்கும் மாநகராட்சி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்கள் **10.12.2018**ந் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தகுதி சான்று புதுப்பிக்க தேவையான பணிகளை மேற்கொள்ளவும், இதற்காகும் செலவீனம் ரூ.**52,510/–**க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட வாகனத்தின் பழுது நீக்கும் பணியினை பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**( இ.1 / 5702 / 2018 / ம.1)**

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**436)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் **01.12.2018**ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய **26.11.2018**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம். அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு **30.11.2018**ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே **01.02.2018** முதல் **28.02.2019** வரை மாநகரில் குடிநீர் விநியோகம் லாரிகள் மூலம் செய்ய ஒரு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**17.50** இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். **( இ.1 / 5247 / 2018)**

– – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**437)** திருப்பூர் மாநகராட்சியில் பற்றாக்குறையாக உள்ள 1580 துப்புரவு பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் (Outsourcing), ஒப்பந்த அடிப்படையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண். K.Dis.No.28369 / J3 / 2018, நாள் 13.11.2018ன்படி உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 427 நாள் 24.01.2019ன்படி மேற்படி பணியாளர்களை அமர்த்திக் கொள்ள அதற்கான நிர்வாக அனுமதியும் மற்றும் செலவீனத்திற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மண்டலம் எண்.1–க்குட்பட்ட பகுதிகளில் 426 துப்புரவுப் பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் (Outsourcing) பணியமர்த்த 2018–19ம் ஆண்டிற்கான திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மண்டலம் எண்.1க்கு கீழ்கண்ட விபரப்படி அமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.8.03 கோடிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியிடம் | எண்ணிக்கை | 2018–19ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி நாளொன்றுக்கு ரூ. | ஒரு நபருக்கு ஓராண்டு செலவினம் (365 நாட்களுக்கு) ரூ. | மொத்த செலவினம் ( ஓராண்டிற்கு) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | 426 | 400 | 1,46,000 | 6,21,96,000 |
| 2 | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13.85% | | | 20,221 | 86,14,146 |
| 3 | E.S.I. 4.75% | | | 6,935 | 29,54,310 |
| 4 | பாதுகாப்பு உபகரணங்கள் | | ஆண்டொன்றுக்கு ரூ.3500 வீதம் ( 1 நபருக்கு) | 14,91,000 | 14,91,000 |
| 5 | சீருடை செலவினம் | | ஆண்டொன்றுக்கு ரூ.1200 வீதம் ( 4 மாதத்திற்கு) | 1,200 | 5,11,200 |
| | | | | **மொத்தம்** | **7,57,66,656** |
| 6 | Overhead Charges 5% | | | | 37,88,333 |
| | | | | **மொத்தம்** | **7,95,54,989** |
| 7 | GST 18% | | | | 6,81,900 |
| | | | | **ஆக மொத்தம்** | **8,02,36,889** |

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 0458 / 2019)

– – – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**438)** திருப்பூர் மாநகராட்சியில் பற்றாக்குறையாக உள்ள 1580 துப்புரவு பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் (Outsourcing), ஒப்பந்த அடிப்படையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண். K.Dis.No.28369 / J3 / 2018, நாள் 13.11.2018ன்படி உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 427 நாள் 24.01.2019ன்படி மேற்படி பணியாளர்களை அமர்த்திக் கொள்ள அதற்கான நிர்வாக அனுமதியும் மற்றும் செலவீனத்திற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

438–ன் தொடர்ச்சி

அதன் அடிப்படையில் மண்டலம் எண்.2–க்குட்பட்ட பகுதிகளில் 368 துப்புரவுப் பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் (Outsourcing) பணியமர்த்த 2018–19ம் ஆண்டிற்கான திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மண்டலம் எண்.2க்கு கீழ்கண்ட விபரப்படி அமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.6.95 கோடிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியிடம் | எண்ணிக்கை | 2018–19ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி நாளொன்றுக்கு ரூ. | ஒரு நபருக்கு ஓராண்டு செலவினம் (365 நாட்களுக்கு) ரூ. | மொத்த செலவினம் ( ஓராண்டிற்கு) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | 368 | 400 | 1,46,000 | 5,37,28,000 |
| 2 | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13.85% | | | 20,221 | 74,41,328 |
| 3 | E.S.I. 4.75% | | | 6,935 | 25,52,080 |
| 4 | பாதுகாப்பு உபகரணங்கள் | | ஆண்டொன்றுக்கு ரூ.3500 வீதம் ( 1 நபருக்கு) | 12,88,000 | 12,88,000 |
| 5 | சீருடை செலவினம் | | ஆண்டொன்றுக்கு ரூ.1200 வீதம் ( 4 மாதத்திற்கு) | 1,200 | 4,41,600 |
| | | | | மொத்தம் | 6,54,51,008 |
| 6 | Overhead Charges 5% | | | | 32,72,550 |
| | | | | மொத்தம் | 6,87,23,588 |
| 7 | GST 18% | | | | 5,89,059 |
| | | | | ஆக மொத்தம் | 6,93,12,617 |

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 0459 / 2019)

– – – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**439)** திருப்பூர் மாநகராட்சியில் பற்றாக்குறையாக உள்ள 1580 துப்புரவு பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் (Outsourcing), ஒப்பந்த அடிப்படையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண். K.Dis.No.28369 / J3 / 2018, நாள் 13.11.2018ன்படி உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 427 நாள் 24.01.2019ன்படி மேற்படி பணியாளர்களை அமர்த்திக் கொள்ள அதற்கான நிர்வாக அனுமதியும் மற்றும் செலவீனத்திற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மண்டலம் எண்.3–க்குட்பட்ட பகுதிகளில் 384 துப்புரவுப் பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் (Outsourcing) பணியமர்த்த 2018–19ம் ஆண்டிற்கான திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மண்டலம் எண்.3க்கு கீழ்கண்ட விபரப்படி அமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.7.24 கோடிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

439–ன் தொடர்ச்சி

| வ. எண். | பணியிடம் | எண்ணிக்கை | 2018–19ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி நாளொன்றுக்கு ரூ. | ஒரு நபருக்கு ஓராண்டு செலவினம் (365 நாட்களுக்கு) ரூ. | மொத்த செலவினம் ( ஓராண்டிற்கு) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | 384 | 400 | 1,46,000 | 5,60,64,000 |
| 2 | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி13.85% | | | 20,221 | 77,64,864 |
| 3 | E.S.I. 4.75% | | | 6,935 | 26,63,040 |
| 4 | பாதுகாப்பு உபகரணங்கள் | | ஆண்டொன்றுக்கு ரூ.3500 வீதம் ( 1 நபருக்கு) | 13,44,000 | 13,44,000 |
| 5 | சீருடை செலவினம் | | ஆண்டொன்றுக்கு ரூ.1200 வீதம் ( 4 மாதத்திற்கு) | 1,200 | 4,60,800 |
| | | | | **மொத்தம்** | **6,82,96,704** |
| 6 | Overhead Charges 5% | | | | 34,14,835 |
| | | | | **மொத்தம்** | **7,17,11,539** |
| 7 | GST 18% | | | | 6,14,670 |
| | | | | **ஆக மொத்தம்** | **7,23,26,209** |

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 0460 / 2019)

– – – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**440)** திருப்பூர் மாநகராட்சியில் பற்றாக்குறையாக உள்ள 1580 துப்புரவு பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் (Outsourcing), ஒப்பந்த அடிப்படையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண். K.Dis.No.28369 / J3 / 2018, நாள் 13.11.2018ன்படி உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து இம்மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். 427 நாள் 24.01.2019ன்படி மேற்படி பணியாளர்களை அமர்த்திக் கொள்ள அதற்கான நிர்வாக அனுமதியும் மற்றும் செலவீனத்திற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மண்டலம் எண்.4–க்குட்பட்ட பகுதிகளில் 402 துப்புரவுப் பணியாளர்களை வெளிச்சந்தை முறையில் (Outsourcing) பணியமர்த்த 2018–19ம் ஆண்டிற்கான திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மண்டலம் எண்.4க்கு கீழ்கண்ட விபரப்படி அமர்த்திக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.7.58 கோடிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியிடம் | எண்ணிக்கை | 2018–19ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி நாளொன்றுக்கு ரூ. | ஒரு நபருக்கு ஓராண்டு செலவினம் (365 நாட்களுக்கு) ரூ. | மொத்த செலவினம் ( ஓராண்டிற்கு) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | 402 | 400 | 1,46,000 | 5,86,92,000 |

| வ. எண். | பணியிடம் | எண்ணிக்கை | 2018–19ம் ஆண்டிற்கான மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி நாளொன்றுக்கு ரூ. | ஒரு நபருக்கு ஓராண்டு செலவினம் (365 நாட்களுக்கு) ரூ. | மொத்த செலவினம் ( ஓராண்டிற்கு) ரூ. |
|---|---|---|---|---|---|
| 2 | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13.85% | | | 20,221 | 81,28,842 |
| 3 | E.S.I. 4.75% | | | 6,935 | 27,87,870 |
| 4 | பாதுகாப்பு உபகரணங்கள் | | ஆண்டொன்றுக்கு ரூ.3500 வீதம் ( 1 நபருக்கு) | 14,07,000 | 14,07,000 |
| 5 | சீருடை செலவினம் | | ஆண்டொன்றுக்கு ரூ.1200 வீதம் ( 4 மாதத்திற்கு) | 1,200 | 4,82,400 |
| | | | | **மொத்தம்** | **7,14,98,112** |
| 6 | Overhead Charges 5% | | | | 35,74,906 |
| | | | | **மொத்தம்** | **7,50,73,018** |
| 7 | GST 18% | | | | 6,43,483 |
| | | | | ஆக மொத்தம் | 7,57,16,501 |

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதிக்கலாம். **( எச்.1 / 0461 / 2019)**

– – – – – –

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**(ஒம்) க. சிவகுமார், எம்.ஏ.,**
**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**